# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 434/2025

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. செந்தில்குமார் | Caste: | |
| Father's Name | :ராக்கு | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

11.03.2026 – 03.25 PM

1, 2 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் இராமநாதபுரம் ஆயுதப்படையில் 3ம் படைப்பிரிவில் இரண்டாம் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.09.2025ம் தேதியன்று காலை 06.30 மணிக்கு மேல் படைப்பிரிவு அலுவலகத்திலிருந்து அபிராமம் காவல் நிலையத்தில் உள்ள வழக்கு சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் ஆஜர் எதிரிகளை முன்னிலைப்படுத்துவதற்காக கடவுச்சீட்டை பெற்றுக் கொண்டு மதுரை மத்தியச் சிறைக்கு காலை 10.30 மணியளவில் சென்று எதிரிகளை அழைத்துக் கொண்டு இந்நீதிமன்றத்திற்கு மதியம் 12.30 மணிக்கு நானும், சார்பு ஆய்வாளர் ஹேமபிரியா, காவலர்–551 திருநாவுக்கரசு, காவலர்–537 கார்த்திக்ராஜா, காவலர்–768 ராமச்சந்திரன் ஆகியோர் சேர்ந்து இந்நீதிமன்றத்திற்கு வந்தடைந்தோம்.

2. நீதிமன்ற வளாகத்திற்கு வந்து சேர்ந்து வாசலில் மேற்படி எதிரிகளுக்கு வழிக்காவல் பணி செய்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியான அஜித் என்பவரது கால் அருகில் ஒரு வெள்ளை நிற சீட்டு கிடந்தது. அந்த சீட்டை அஜித் எடுத்து அன்றைய தினம் அவரை பார்க்க வந்திருந்த உறவினரான ஒரு ஆண் நபரிடம் கொடுக்க முயன்றார். நான் அஜித்திடம் என்னையா இது என்று கேட்டு அவர் வைத்திருந்த அந்த சீட்டை வாங்கி பார்த்துவிட்டு இவ்வாறு சீட்டு எழுதி யாருக்கும் கொடுக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு அந்த சீட்டை தூக்கிப் போட்டுவிட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்பதை நான்

பார்க்கவில்லை.

3. நான் அந்த சீட்டை தூக்கிப்போட்டவுடன் அஜித் என்பவர் என்னைப் பார்த்து என்ன ஏய் என்கிறாய் என்று கேட்டு அவரது வலது கையை மடக்கி முழங்கையால் எனது கழுத்தில் குத்துவது போன்று செய்தார். அப்போது காவலர் திருநாவுக்கரவு அவரது கையை பிடித்து தடுத்தபோது கையை விடு என்று சொல்லி நீ எல்லாம் பெரிய ஆளா உன்னை அடித்துவிடுவேன் என்று சொல்லவும் ஆஜர் எதிரியான மணிவண்ணனும் அஜித்துடன் சேர்ந்துகொண்டு என்னைப் பார்த்து போலீஸ்னா பெரிய மயிராடா நானே ஊர்ல பெரிய ரவுடி என் மேல நிறைய கேஸ் இருக்கு நான் ஜெயிலுக்குள்ள இருந்துக்கிட்டே உங்கள கொன்றுவேன்னு மிரட்டினார்.

4. அவர்களில் எதிரி மணிவண்ணன் என்னைப் பார்த்து நீ என்ன ஜாதிடா எதுக்கு என்னை எல்லாம் கேள்வி கேக்குறன்னு கேட்டார். அப்போது சார்பு ஆய்வாளர் ஹேமபிரியா அவர்கள் என்னிடம் நீங்கள் கொஞ்சம் தள்ளி இருந்து கொள்ளுங்கள் எதிரிகளால் உங்களுக்கு எதுவும் ஏற்பட்டு விடக்கூடாது என்று கூறியதால் நானும் தள்ளியிருந்து கொண்டேன். அப்போது எதிரி அஜித் சார்பு ஆய்வாளரிடம் மேடம் அவன போகச் சொல்லுங்க இல்லனா நான் அவன அடிச்சிறுவேன்னு என்னைப் பார்த்து கூறினார். அன்றைய தினம் பின்னர் எதிரிகளுக்கான வழக்கு நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டவுடன் எதிரிகளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திவிட்டு வாய்தா தேதியை பெற்றுக் கொண்டு மீண்டும் அவர்களை நல்ல முறையில் மதுரை மத்திய சிறையில் சென்று சேர்ப்பித்தோம். ஆனால் சென்று கொண்டிருக்கும் போதே எதிரி அஜித் என்னைப் பார்த்து நான் உள்ளே இருக்கிறேன்னு நினைக்காத வெளியே ஆள வச்சு உன்ன முடிச்சுடுவேன்னு சொன்னார்.

5. பின்னர் எதிரிகளை சிறையில் ஒப்படைத்துவிட்டு கமுதி காவல் நிலையத்திற்கு வந்து எழுத்துப்பூர்வமான புகாரை சார்பு ஆய்வாளரிடம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு நான் அளித்தது தான். அந்த **புகார் மனு அ.சா.ஆ.1** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. நான் நீதிமன்ற சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் புகாரிலும் சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தபோதும் கூறினேனா என்றால் ஜாதி ரீதியாக எதிரிகள் பேசியதை மட்டும் கூறவில்லை. மற்ற விபரங்களை கூறினேன். புகாரை கைப்பட நான் தான் எழுதினேன். தட்டச்சு செய்த புகாரில் நான் கையொப்பம் செய்யவில்லை. அன்றைய தினம் வழிக்காவலுக்கு வந்த அனைத்து போலீசாரும் என்னுடன் புகார் அளிக்க நிலையம் வந்தார்கள்.

2. புகாரில் மேற்படி வழிக்காவல் போலீசார் அனைவரும் என்னுடன் புகார் அளிக்க நிலையம் வந்ததாக கூறியுள்ளேனா என்றால் ஆமாம் கூறியுள்ளேன். வழிக்காவல் வாகனத்தை ஓட்டி வந்த காவலரான சுரேஷ் என்பவரது பெயரையும் குறிப்பிட்டுள்ளேன். நீதிமன்றத்தில் உள்ள புகார் மனுவில் வழிக்காவல் போலீசாரின் பெயர் இல்லை என்றால் அந்த புகார் என்னால் அளிக்கப்பட்டது அல்ல என்று எடுத்துக் கொள்ளலாமா என்றால் ஆமாம் எடுத்துக் கொள்ளலாம். சம்பவமானது மதியம் 12.45 மணியளவில் நடைபெற்றது.

3. எத்தனை மணிக்கு எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினோம் என்றால் 12.50 மணியளவில் ஆஜர்படுத்தினோம். எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு முன்பு தான் வழக்கு சம்பவம் நடைபெற்றது. அன்றைய தினம் மதுரை மத்திய சிறையிலிருந்து காலை 10.30 மணிக்கு எதிரிகளை எடுத்து வந்தோம். வாகனத்தை எங்கும் நிறுத்தாமல் நேராக நீதிமன்றத்திற்கு தான் வந்தோம். 26.09.2025ம் தேதி நான் புகார் அளித்த தினமே என்னை சார்பு ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து மாலை 06.30 மணியளவில் விசாரித்தார்.

4. சம்பவத்திற்கு மறுநாள் நான் என்ன பணியில் இருந்தேன் என்பது எனக்கு நினைவில் இல்லை. பணிப்பதிவேட்டை பார்த்து தான் கூறமுடியும். சார்பு ஆய்வாளர் என்னை 27.09.2025ம் தேதி விசாரித்ததாக நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருந்தால் அது தவறு என்றால் அது பற்றி எனக்கு

தெரியவில்லை. ஆனால் என்னை சார்பு ஆய்வாளர் 26.09.2025ம் தேதியன்றுதான் விசாரித்தார். எதிரிகளை அழைத்து வந்த காவல் வாகனத்தில் 32 நபர்கள் வரை பயணம் செய்யலாம். அன்றைய தினம் ஆஜர் எதிரிகளை தவிர்த்து வேறு வழக்கில் சம்மந்தப்பட்ட ஒரு நபரையும் இதே நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தோம். அந்த நபரின் பெயர் நினைவில் இல்லை. வழக்கும் தெரியாது. அன்றைய தினம் அந்த நபருக்கும் நாங்கள்தான் வழிக்காவல் பணி செய்தோம். வேறு போலீசார் யாரும் இல்லை.

5. சம்பவ சமயத்தில் நீதிமன்ற வளாகத்தில் சுமார் 60 நபர்கள் வரையில் இருந்தார்கள். பொதுவாக நீதிமன்ற வளாகத்தில் CCTV கேமராக்கள் இருக்கும் என்றால் சரிதான். இந்நீதிமன்ற வளாகத்திலும் CCTV கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சம்பவ சமயத்தில் CCTV கேமரா இருந்த விபரம் எனக்கு தெரியாது. ஆனால் இப்போது வந்து பார்த்தேன். கேமரா உள்ளது. நான் இதை வழக்கிற்காக கூறுகிறேன் என்றாலும் இந்நீதிமன்ற வளாகத்திலும் CCTV கேமராக்கள் உள்ளது என்று எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் ஆனால் வேண்டுமென்றே நான் புகாரிலும் சார்பு ஆய்வாளரிடமும் கேமரா குறிப்புகள் குறித்து கூறினால் அது எனக்கு எதிராக அமைந்துவிடும் என்பதால் நான் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவதை உடன் இருந்த போலீசார் செல்போனில் பதிவு செய்ய முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறியபடி சம்பவம் நடைபெற்றிருந்தால் போலீசாராகிய நாங்களே செல்போனில் வீடியோ ஆதாரங்களை சேகரித்திருப்போம் என்றால் சரியல்ல. அன்றைய தினம் துண்டுச் சீட்டால் பிரச்சனை வந்ததாக சொல்லப்படுகிற நிலையில் அந்த துண்டுச் சீட்டை நான் ஏன் படித்துப் பார்க்கவில்லை என்றால் எங்களது வழிக்காவலில் இருக்கும் நபர் எந்த குற்றமும் செய்து விடக்கூடாது என்று மட்டுமே எண்ணினேன். அதனால் தான் அந்த துண்டுச் சீட்டில் என்ன இருந்தது என்பதை நான் படித்துப் பார்க்கவில்லை.

7. நான் கூறியபடி எதிரியானவர் எவ்வித துண்டுச்சீட்டையும் யாரிடமும்

கொடுக்க முயலவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு முயன்றிருந்தால் நான் அந்த துண்டுச் சீட்டை படித்துப் பார்த்து அதில் என்ன உள்ளது என்பதை படித்து தெரிந்து கொண்டிருப்பேன் என்றாலும் அந்த துண்டுச் சீட்டை முக்கிய ஆவணமாக சார்பு ஆய்வாளரிடம் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. சுமார் 5 நிமிடங்கள் வரை எதிரிகள் என்னிடம் பிரச்சனை செய்தார்கள்.

8. சம்பவம் குறித்து உடனடியாக உயர் அதிகாரிகளுக்கோ கமுதி காவல் நிலையத்திற்கோ தகவல் அளித்தேனா என்றால் நான் அளிக்கவில்லை. தனிப்பிரிவு காவலர் தகவல் அளித்திருப்பார் என்று நினைக்கிறேன். எதிரிகள் அன்றைய தினம் ஆஜர்படுத்தப்பட்ட வழக்கு சம்மந்தப்பட்ட காவல் நிலைய போலீசார் நீதிமன்றத்தில் இருந்தார்களா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. சம்பவம் நடந்திருந்தால் மேற்படி எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்ட வழக்கு சம்மந்தப்பட்ட போலீசாரும் நீதிமன்றத்தில் இருந்திருப்பார்கள் என்றாலும் சம்பவம் உண்மையாக நடந்திருந்தால் அவர்களையும் வழக்கில் சாட்சிகளாக சேர்த்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல.

9. சம்பவம் நடந்தது உண்மையாக இருந்திருந்தால் எதிரிகளை காவல் நிலையம் அழைத்துச் சென்று புகார் அளித்துவிட்டு அதன் பின்னர் மதுரை மத்திய சிறைக்கு எதிரிகளை அழைத்துச் சென்றிருப்போம் என்றால் சரியல்ல. நாங்கள் வழிக்காவல் பணி செய்வதால் அதை தவிர்த்து வேறு எந்த இடத்திற்கும் செல்லக்கூடாது. ஆனால் உயர் அதிகாரி உத்தரவிட்டால் செல்லலாம். சம்பவம் நடந்தது உண்மையாக இருந்திருந்தால் நான் எனது உயர் அதிகாரிக்கு போன் மூலம் தகவல் அளித்திருப்பேன் என்றாலும் உயர் அதிகாரி என்னை உடனடியாக புகார் அளிக்கக் கூறியிருப்பார் என்றாலும் சரியல்ல.

10. எதிரிகளை 01.30 மணிக்கு நீதிமன்றத்திலிருந்து அழைத்துக் கொண்டு மதுரை மத்திய சிறைக்கு கொண்டு செல்லும் வழியில் திருப்பாச்சேத்தி அருகே உள்ள ஒரு கடையில் மதியம் 03.30 மணிக்கு வாகனத்தை நிறுத்தி மதிய உணவு உட்கொண்டோம். கமுதியிலிருந்து செல்லும் வழியில் பல்வேறு கடைகள் உள்ள நிலையில் எதற்காக மேற்படி கடையில் நிறுத்தினோம் என்றால் அந்த

பாதுகாப்பாக இருந்ததால் அந்த கடையில் நிறுத்தினோம். எதிரிகள் அன்றைய தினம் வாகனத்தில் செல்லும் போது தண்ணீர் வேண்டும் சாப்பாடு வேண்டும் என்று அடம்பிடித்தார்கள். அதனால் அவர்களுக்கும் சாப்பாடு வாங்கிக் கொடுத்தோம். ஆனால் அவர்களுக்கு சிறையிலிருந்தே சாப்பாடும் தண்ணீரும் வழங்கப்படும். அதை அவர்கள் எடுத்துவரவில்லை. சார்பு ஆய்வாளர் ஹேமபிரியா அவர்கள் தான் எதிரிகளுக்கு உணவு வாங்கிக் கொடுத்தார். எதிரிகள் எங்களிடம் நீதிமன்ற வாயிலில் தகராறு செய்திருந்தால் நாங்கள் அவர்களுக்கு உணவு வாங்கித் தந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் எதிரிகளுக்கு ஏற்கனவே முன் குற்ற வழக்குகள் இருப்பதால் உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதால் பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. எதிரிகள் என்னை ஜாதி ரீதியாக அன்றைய தினம் பேசியிருந்தால் அது குறித்து புகாரிலேயே தெரிவித்திருப்பேன் என்றாலும் குறைந்த பட்சம் சார்பு ஆய்வாளர்விசாரித்தபோதேனும் கூறியிருப்பேன் என்றாலும் சரியல்ல. ஆனால் மேற்படி புகாரிலும் சார்பு ஆய்வாளர் விசாரித்தபோதும் அது பற்றி தெரிவிக்காமல் தற்போது பின் யோசனைக்கு பின்னிட்டு எதிரிகள் மீது வீண் பழி சுமத்தும் நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறியபடி குற்றச் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் உண்மையில் எதிரிகள் அன்றைய தினம் எங்களிடம் தண்ணீர் மற்றும் உணவு கேட்டபோது அவர்களுக்கு அதை தர மறுத்து நாங்கள் தான் எதிரிகளை மனிதாபமானமின்றி நடத்தினோம் என்றாலும் நீதிமன்றத்தில் அதை கூறப் போவதாக எதிரிகள் தெரிவித்ததால் அவர்கள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சார்பு ஆய்வாளரும் போலீசாராக இருப்பதால் எங்களுக்கு ஆதரவாக பொய்யாக இறுதி அறிக்கையை தயார் செய்ததை அனுசரித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.11 17:31:15 +0530